கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு 2008/2009
(யூன்/யூலை 2010)

LIBRARY
03 AUG 2010
Eastern University, Sri Lanka.

## EDU/S 3201 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும்
## Teaching Method and Techniques

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் தொடர்புபடுகின்ற உள்ளீடு (Input), செயன்முறை (Process) விளைவு (Out come) ஆகிய மாறிகளின் செயற்பாடு பற்றி சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஆசிரியரின் வகிபங்கு (Role) காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்துள்ளது. ஆரம்பகால ஆசிரியர்கள் தடத்தல் வகிபங்கினையும் (Transmission role), இடைப்பட்ட கால ஆசிரியர்கள் பரிமாற்று வகிபங்கினையும் (Transaction role), தற்கால ஆசிரியர்கள் நிலைமாற்று வகிபங்கினையும் (Transformation role) தனது செயற்பாட்டின்மூலம் வெளிக்காட்டுகின்றனர். இதன்படி நிலைமாற்று வகிபாகத் தன்மைக்கேற்ப ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் கற்பித்தலுக்கு எவ்வாறு சாதகமாக அமைகின்றதென்பதை எடுத்துரைக்க.

(15 புள்ளிகள்)

02.(அ) வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் தொடர்பாடல் செயன்முறையை சிறப்பாக முன்னெடுக்க கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள் எவ்வாறு வகுப்பறைச் செயற்பாட்டிற்கு சாதகமாக அமைகின்றது?

(12 புள்ளிகள்)

(ஆ) சிறப்பான கற்பித்தலை மேற்கொள்வதற்கு பாட விடயத்திற்கேற்ப பொருத்தமான விஷேட குறிக்கோள் (Specific Objective) ஆசிரியரினால் உருவாக்கப்படுவது அவசியமாகும். இவ்வாறான விஷேட குறிக்கோளை அமைப்பதினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

(13 புள்ளிகள்)

03.(அ) சிறப்பான கற்பித்தலுக்காக பாடசாலை ஆசிரியர்களிடம் இருவகையான திட்டங்கள் இருப்பது அவசியமாகும்.

(i) வருடம் முழுவதுக்குமான சுருக்கமான வேலைத் திட்டம் (Scheme of Work)

(ii) இத்திட்டத்தின் அடிப்படையில் அமைந்த 40 நிமிட பாடவேளையை தனது குறிக்கோள்களையடைய எடுக்கும் பாடக்குறிப்பு (Notes of Lesson)

இவ்விரு திட்டங்களையும் ஆசிரியர் எவ்வாறு பாடத்திட்டத்திலிருந்து உருவாக்குவார் என்பதை படிமுறையில் முன்வைக்க.

(20 புள்ளிகள்)

(ஆ) பாடக்குறிப்பில் அமையும் விசேட குறிக்கோளானது எப்போதும் நடத்தை மாற்றத்தை அவதானிக்கக்கூடியதாக அமைய வேண்டும். வகுப்பறை கற்பித்தல் நுட்பத்தை மையமாகக் கொண்டு இதை ஆராய்க.

(05 புள்ளிகள்)

04.(அ) வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளின்போது மாணவர்களுக்கு வழங்கக்கூடிய முதல் நிலை அனுபவம் முக்கியமானதாகும். இதை வழங்கும்போது ஆசிரியர் கவனிக்க வேண்டிய அம்சங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் மாதிரிப்பொருட்களை உபயோகிப்பதினால் ஏற்படும் அனுகூலங்கள் கற்றலுக்கு எவ்வாறு சாதகமாக அமைகின்றதென்பதை எடுத்துக்கூறுக.

(10 புள்ளிகள்)

(இ) பாடசாலையை சமூகத்தோடும், வெளி உலகோடும் தொடர்புபடுத்தும் ஒரு மார்க்கமே கல்விச் சுற்றுலா ஆகும். இதன்படி கல்விச்சுற்றுலா ஒன்றின் கல்விப்பெறுமானம் என்பதை மாணவர்களுக்கு எவ்வாறு முன்வைப்பீர்?

(05 புள்ளிகள்)

05.(அ) கட்புல சாதனங்களை பயன்படுத்தும்போது கருத்திற்கொள்ள வேண்டிய அம்சங்களை சுருக்கமாக எடுத்துரைக்க.

(05 புள்ளிகள்)

(ஆ) பாடவிடயத்துடன் தொடர்புடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு ஒழுங்குமுறைகள் உள்ளன.

(i) விதிவரு முறை (Inductive Method)

(ii) விதி விளக்கு முறை (Deductive Method)

பாடவிடயமொன்றை உதாரணமாகக் கொண்டு இவற்றை சுருக்கமாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(இ) அணிமுறைக் கற்பித்தலை சுருக்கமாக விளக்கி, இது எங்கு, எச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றதென்பதையும் அதன் அனுகூலங்களையும் தருக.

(05 புள்ளிகள்)

06.(அ) சிறந்த ஒப்படையொன்றில் அமையவேண்டிய அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) இடைநிலைப்பாடசாலை வகுப்பறையில் முன்திட்ட முறையில் கற்பித்தல்மூலம் வினைத்திறனான விளைவு ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. இதன்படி, முன்திட்ட முறையில் கற்பித்தலை எவ்வாறு ஒழுங்குபடுத்துவீர்?

(15 புள்ளிகள்)

(இ) செயற்றிட்ட முறையில் கற்பித்தலின் படிமுறைகளைக்கூறி, அதை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

********